ஸ்ரீ மனீஷா பஞ்சகம்

தமிழ் உரை:- ஞானபாஸ்கர,
பண்டிட் **P.N.** **நாராயண சாஸ்திரிகள்**.

जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृंभते
याब्रह्मादि पिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ।
सैवाहं न च दृश्यवस्त्विति दृढप्रज्ञापि यस्यास्ति चेत्
चण्डालोस्तु स तु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मम ॥ १

ஜாக்3ரத்ஸ்வப்னஸுஷுப்திஷு ஸ்பு2டதரா யா ஸம்விது3ஜ்ஜ்ரும்ப4தே
யாப்3ரஹ்மாதி3 பிபீலிகாந்ததனுஷு ப்ரோதா ஜக3த்ஸாக்ஷிணீ ।
ஸைவாஹம் ந ச த்3ருஶ்யவஸ்த்விதி த்3ருட4ப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்தி சேத்
சண்டா3லோஸ்து ஸ து த்3விஜோஸ்து கு3ருரித்யேஷா மனீஷா மம ॥ 1

விழிப்பு, கனவு, தூக்கம் இவைகளில் எந்த ஒளியானது விளக்கமாய் செயல் படுகிறதோ, எது பிரம்மா முதல் எறும்பு ஈருகவுள்ள ஜீவர்களின் உடல்களில் மணி களில் கோர்க்கப்பட்ட நூல் போன்று உலகத்திற்கு ஸாக்ஷியாக விளங்குகிறதோ அதுவே நான் என்றும் காணப்படுபவைகள். நானல்ல என்னும் உறுதியான அறிவு எவருக்கிருக்கிறதோ அவர் அந்தணராஞலும், பஞ்சமராஞலும் அவர்தான் என் குரு. இது என் எண்ணம்.

ब्रह्मैवाहमिदं जगच्च सकलं चिन्मात्र विस्तारितम्
सर्वं चैतदविद्यया त्रिगुणया शेषं मया कल्पितम् ।
इत्थं यस्य दृढा मतिः सुखतरे नित्ये परे निर्मले
चण्डालोस्तु स तु द्विजोस्तु गुरुरित्येषा मनीषा मम ॥ २

ப்3ரஹ்மைவாஹமித3ம் ஜக3ச்ச ஸகலம் சின்மாத்ர விஸ்தாரிதம்
ஸர்வ சைதத3வித்3யயா த்ரிகு3ணயா ஶேஷம் மயா கல்பிதம் ।
இத்த2ம் யஸ்ய த்3ருடா4 மதிः ஸுக2தரே நித்யே பரே நிர்மலே
சண்டா3லோஸ்து ஸ து த்3விஜோஸ்து கு3ருரித்யேஷா மனீஷா மம ॥ 2

நானே பிரும்மம், அறிவிஞல் பரவிய இந்த உலகமும் இவை எல்லாம் முக்குணங்களோடு கூடிய மாயையின் மிகுதியும் என் கற்பனையே. இம்மாதிரி எவருக்கு உயர்ந்த ஸுக ஸ்வரூபமாயும், அழுக்கற்றதாயும், நித்யமானதுமான பரப்பிரம்மத்தினிடத்தில் உறுதியான புத்தியிருக்கிறதோ. அவர் அந்தணராஞலும் பஞ்சமராஞலும் என் குரு. இது என் எண்ணம்.

शश्वन्नश्वरमेव विश्वमखिलं निश्चित्य वाचा गुरोः
नित्यं ब्रह्मनिरन्तरं विमृशता निर्व्याजशान्तात्मना ।
भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके
प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनीषा मम ॥ ३

ஶஶ்வன்னஶ்வரமேவ விஶ்வமகி2லம் நிஶ்சித்ய வாசா கு3ரோ:
நித்யம் ப்3ரஹ்மநிரந்தரம் விம்ருஶதா நிர்வ்யாஜஶாந்தாத்மனா ।
பூ4தம் பா4வி ச து3ஷ்க்ருதம் ப்ரத3ஹதா ஸம்வின்மயே பாவகே
ப்ராரப்3தா4ய ஸமர்பிதம் ஸ்வவபுரித்யேஷா மனீஷா மம ॥ 3

எல்லா உலகும் உடனே அழியக்கூடியது என்பதை குருவின் உபதேசத்தால் நிச்சயித்து, காரணமற்ற அமைதியுடன் எப்பொழுதுமுள்ள பிரம்மத்தை சிந்தித்து சென்ற காலத்திலும் வருங்காலத்திலும் உள்ள கெட்ட செய்கைகளை க்ஞான அக்னியில் எரித்து இந்த தன் உடல் பிராரப்தத்திற்கு உள்ளது என்னும் இது என் எண்ணம்.

या तिर्यङ्नर देवताभिरहमित्यन्तः स्फुटात्गृह्यते
यद्भासा हृदयाक्ष देह विषया भान्ति स्वतोऽचेतनाः ।
तांभास्यैः पिहितार्क मण्डलनिभां स्फूर्ति सदा भावयन्
योगी निर्वृतमानसो हिं गुरुरित्येषा मनीषा मम ॥ ४

யா திர்யங்னர தே3வதாபி4ரஹமித்யந்த: ஸ்பு2டாத்க்3ருஹ்யதே
யத்3பா4ஸா ஹ்ருத3யாக்ஷ தே3ஹ விஷயா பா4ந்தி ஸ்வதோ(அ)சேதனா:।
தாம்பா4ஸ்யை: பிஹிதார்க மண்ட3லனிபா4ம் ஸ்பூ2ர்தி ஸதா3 பா4வயன்
யோகீ3 நிர்வ்ருதமானஸோ ஹிம் கு3ருரித்யேஷா மனீஷா மம ॥ 4

எது தேவர், மனிதர், பறவைகளுக்குள் நான் என்று நன்கு தெரிகிறதோ, எதன் ஒளியினால் ஹ்ருதயம் கண் உடல் இவைகளுக்குத் தெரிகிற அசேதனங்களும் பிரகாசிக்கிறதோ, மேகங்களால் மறைக்கப்பட்ட ஸூரிய பிம்பம் போன்ற அந்த ஒளியைத் தெளிவானதாய் எப்பொழுதும் சிந்தனை செய்துகொண்டு ஒழிவடைந்த மனதையுடைய யோகியே என் குரு. இது என் எண்ணம்.

सत्सौख्याम्बुधि लेशलेशत इमे शक्रादयो निर्वृताः
यश्चित्तेनितरां प्रशान्तकलने लब्ध्वा मुनिर्निर्वृतः ।
यस्मिन्नित्य सुखाम्बुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मवित्
यः कश्चित्स सुरेन्द्र वन्दितपदो नूनं मनीषा मम ॥ ५

ஸத்ஸௌக்²யாம்பு³தி⁴ லேஶலேஶத இமே ஶக்ராத³யோ நிர்வ்ருதா:
யஶ்சித்தேநிதராம் ப்ரஶாந்தகலனே லப்³த்⁴வா முநிர்நிர்வ்ருத: ।
யஸ்மிந்நித்ய ஸுகா²ம்பு³தௌ⁴ க³லிததீ⁴ர்ப்³ரஹ்மைவ ந ப்³ரஹ்மவித்
ய: கஶ்சித்ஸ ஸுரேந்த்³ர வந்தி³தபதோ³ நூனம் மனீஷா மம ॥ 5

பரமமாநந்தக் கடலின் திவலைகளின் திவலையாக இந்த இந்திரன் முதலியவர் கள் ஒழிவடைகிறுர்களோ மிகவும் அமைதி யுடைய மனதில் எதை அடைந்து முனி ஒழிவடைகிருரோ, எந்த நித்ய ஸுகக்கடலில் நழுவிய புத்தியுடையவர் ப்ரம்மமே, பிரம்மமறிந்தவர் மட்டுமல்ல, அவன் இந்திரனுல் தொழப்பட்ட பாதங்களை யுடைய வன் இது என் நிச்சயமான எண்ணம்.